
# வாழத் துடிக்கும் வடலிகள்



செ. அன்புராசா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழத் துடிக்கும் வடலிகள்

செ. அன்புராசா

முருங்கன் முத்தமிழ் கலாமன்றம்
மன்னார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் தலைப்பு - வாழத் துடிக்கும் வடலிகள்; நூல் ஆசிரியர் - செ. அன்புராசா;
வெளியீடு - முருங்கன் முத்தமிழ் கலாமன்றம்; முதற்பதிப்பு - மார்கழி, 2017;
வடிவமைப்பு, அச்சுப்பதிப்பு - ஜே. எஸ். கிராபிக்ஸ்; பதிப்புரிமை - ஆசிரியர்;
அட்டை ஓவியம் - செல்வி எஸ். சர்மலா; படங்கள் - இணையம்;
பக்கங்கள் - xviii+30; விலை - 200.00

Title - Vaala Thudikkum Vadalikal; Author - S.Anpurasa;
Publisher - Murunkan Muththamil Kalamandram; First Edition - December, 2017;
Layout & Printed by - JS Graphics; Copy Right - Author;
Cover Art - S.Sarmala; Pictures - Internet
Pages - xviii+30; Price - 200.00

அன்புராசா, எஸ்.
வாழத்துடிக்கும் வடலிகள் / எஸ். அன்புராசா. -
மன்னார் : முருங்கன் முத்தமிழ் கலாமன்றம், 2017. -
ப. 30 ; செமீ. 21.
ISBN 978-955-4609-02-0
I. 894.8111 டிவி 23 ii. தலைப்பு
1. சிறுவர் பற்றிய கவிதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழத் துடிக்கும்

வடலிகளை

வாழவைப்போருக்குச்

சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே

அணிந்துரை i
கருத்துரை vi
நயவுரை xi
வாழ்த்து மொழி xiv
என்னுரை xv
01. இருமுது குரவர் (இறை)வணக்கம் 1
02. ஏனோ? 2
03. கரந்தொடுப்பீர் பலம் கொடுப்பீர் 3
04. முன்னுக்குப் பின் முரண் ஏன்? 4
05. நேரமில்லை நேரமில்லை! 6
06. எமக்கு மட்டும் இப்படியேன்! 8
07. சிந்திக்க மாட்டீரோ! 10
08. உள்ளம் இரங்காதா? 11
09. எம் கனவுகளை அடையச் செய்வீர்! 12
10. ஒதுக்க வேண்டாம்! 13
11. உண்மை மனிதர் அன்றோ! 14
12. எம் மனம் ஆற்றுவீர்! 15
13. வேண்டாம் மீண்டும் ஒரு பரணி! 16
14. முக்கியம்! 17
15. புதிய பாரதிகள்! 18
16. பிரிவு வேண்டாம்! 19
17. வேண்டும்! 20
18. போட்டிகள் 22
19. ஒன்றுபட்டு உழைப்போமே! 24
20. ஆசைமேல் ஆசை! 26
21. புதிய நம்பிக்கை 28
22. பிடிச்சிருக்கு! 29

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்துரை

# மனிதத்தின் குரல்

இலக்கிய வடிவங்களில் கவிதை இலக்கியம் மிகவும் நுட்பமானது மட்டுமல்ல மிகக் காரமானதுமாகும். நான்கு பக்கங்களில் கூறப்பட்டிருக்கும் ஒரு செய்தியை நான்கு வரிகளிலோ அல்லது நான்கு சொற்களிலோ கூறுவதுதான் கவிதை. ஒன்றை விரித்துக் கூறுவதற்கு அறிவு வேண்டும். அதேவேளை, ஒன்றைச் சுருக்கிக் கூறுவதற்கு 'நுட்பமான அறிவு' வேண்டும். அதனால்தான் கவிதை இலக்கியம் 'நுட்பமானதெனக்' குறிப்பிட்டேன்.

அருட்திரு. செ.அன்புராசா அவர்களின் இலக்கியப் பணிகள் பல வடிவங்களில் அமைந்துள்ளன. அவரின் இலக்கியப் பணி நீட்சியில் இறுதியாக வெளிவந்திருக்கும் 'வாழத் துடிக்கும் வடலிகள்' என்ற இந்நூல் கவிதை நூலாக அமைந்துள்ளது.

'வாழத் துடிக்கும் வடலிகள்' இத்தலைப்பில் இடம்பெற்றுள்ள 'வடலிகள்' என்ற சொல் மிக அர்த்த புஷ்டியானதொரு சொல்லாகும். 'வடலி' என்பது பனைமரத்தின் இளமைப் பருவத்தைக் குறிக்கும் ஒரு சொல்லாகும். இந்தப் பனைமரம் சாதாரணமானதொரு மரமல்ல, யாழ்ப்பாணக் குடாநாட்டின் குறியீடாக வழங்கும் ஒரு மரமாகும். இதற்கென்று ஒரு வரலாறு மட்டுமல்ல, அதற்கு மேலால் அதற்கொரு பலமும் உண்டு.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த இந்தப் பனைமரத்தின் வாரிசுகளாக வடலிகளை, நமது சிறார்களுக்கு உவமைப்படுத்தியுள்ளார் கவிஞர் அன்புராசா அவர்கள். எதிர்காலச் சந்ததியின் தலைவிதியை நிர்ணயிக்கப்போகும் இன்றைய நமது சிறார்களை வடலிக்கு உவமைப்படுத்திய அடிகளாரின் தூரநோக்குப் பாராட்டப்பட வேண்டியதென்பதில் இரண்டு கருத்துகளுக்கு இடமில்லை.

'இன்றைய சிறார்கள் நாளைய சமூகத்தின் தலைவர்கள்' என்பது தனி மனிதனிலிருந்து அரசுவரை உணரப்பட்டதொரு 'சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமமாகும்'. சகலராலும் உணரப்பட்ட இந்தச் சமூக நியமத்தைக் 'கண்டும் காணாதவர்களாக' இருந்து, இந்தச் சிறார்களையும் இவர்களின் வருகைக்காகக் காத்திருக்கும் எதிர்காலச் சமூகத்தையும் 'சீரழித்து விடாதீர்கள்' என்று கேட்கும் தொனியிலேயே இக்கவிதைத் தொகுதி அமைந்துள்ளது.

'வாழத் துடிக்கும் வடலிகள்' என்ற இக்கவிதைத் தொகுதியின் உள்ளீடுகளை அவதானிக்கும் போது ஐந்தாம் வகுப்பில் அரசினால் நடத்தப்படுகின்ற 'புலமைப் பரிசில் பரீட்சையின்' போது மாணவர் களைப் பெற்றோரும், ஆசிரியர்களும் 'வறுத்தெடுக்கின்ற' சம்பவங் களே இந்நூல் வெளியீட்டுக்கான நதிமூலமாக இருக்கலாமென எண்ணத் தோன்றுகின்றது. அதேவேளை கல்வி, பரீட்சை, புள்ளிகள், மதம், அரசியல், விஞ்ஞான சாதனங்கள் என சமூகத்தின் சமகால இயங்கியல் கூறுகள் பலவற்றையும் கவிஞர் சுட்டிக்காட்டுகின்றார் என்பதையும் மறுப்பதற்கில்லை.

இத்தொகுதியில் இருபத்தியிரண்டு தலைப்புக்களில் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. பதினைந்தாவது கவிதை 'புதிய பாரதிகள்' என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ளது. மகாகவி பாரதியாரின் "காலை எழுந்தவுடன் படிப்பு, பின்பு, கனிவு கொடுக்கும் நல்லபாட்டு" என்ற கவிதையை அடியொற்றிக் கவிஞர் அன்புராசா அவர்கள் பின்வருமாறு தனது கவிதையைத் தந்துள்ளார்.

"காலை எழுந்தவுடன் 'ரியூஷன்'- பின்பு
பள்ளி முடிந்தவுடன் 'ரியூஷன்'
மாலைமுழுவதுமே 'ரியூஷன்' - இதை
மனதில் இருத்திக்கொள் மகனே(ளே)"

இன்றைய சமூகத்தின் இயங்கியல் யதார்த்தத்தை எந்தக் கலப்புமின்றி கவிதை வடிவில் கவிஞர் தந்துள்ளார். பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை மட்டும் நேசிக்கும் இயல்பு கொண்டவர்கள். ஆனால் அருட்தந்தையர்கள் கிறீஸ்தவ குழந்தைகளை மட்டுமல்ல, அனைத்துக் குழந்தைகளையும் நேசிக்கின்ற பண்பு கொண்டவர்கள். ஒரு பிள்ளையின் வேதனையைப் பார்ப்பதற்கும், பல பிள்ளைகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதனைகளைப் பார்ப்பதற்குமிடையே உள்ள உணர்வு நிலைத் தாக்கங்களில் வேறுபாடுகள் உண்டு. துறவிகளுக்குக் குழந்தைகளை நேசிக்கும் பண்புண்டு என்ற பாரம்பரிய உணர்வு நிலைக்கு மேலால் அன்புராசா அடிகளார் இயல்பாகவே இரங்குகின்ற சுபாவம் மிக்கவர். அதனால்தான் 'ரியூஷனால்' இந்தச் சிறார்கள் படும் அவலங்களை அவரால் உணர முடிந்திருக்கின்றது.

இந்தக் கவிதையில் கூறப்பட்டுள்ள செய்தியை இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள 'முக்கியம்'(14ஆவது கவிதை) என்ற கவிதையில் இன்னொரு கோணத்தில் வெளிப்படுத்துகின்றார்.

"படிப்பு முக்கியம் - என்பதைப்போல்
பரீட்சை முக்கியம்!
பரீட்சை முக்கியம் - என்பதைப்போல்
புள்ளிகள் முக்கியம்!

புள்ளிகள் முக்கியம் - அதனைவிடப்
பிள்ளைகள் முக்கியம்!
பிள்ளைகள் முக்கியம் - எம்போன்ற
பிள்ளைகள் முக்கியம்!"

இந்தக் கவிதை பிள்ளைகளின் நேரடி 'வாக்கு மூலமாகவே' கவிஞர் தந்திருப்பது 'அப்பீலற்ற' வலிமையானதொரு முறைப்பாடாகவே அமைந்துள்ளது.

கம்ப இராமாயணத்தில் ஒரு காட்சி எனக்கு நினைவுக்கு வருகின்றது. சீதையைத் தேடி இலங்கைக்குச் சென்ற அனுமான், சீதையைச் சந்தித்துவிட்டுத் திரும்புகிறான். அனுமானின் வருகையை எதிர்பார்த்து இராமன் காத்திருக்கிறான். இராமன் அனுமானைக் காண்கிறான். அனுமான் தான் சீதையைக் கண்ட செய்தியை இராமனுக்கு பின்வருமாறு கூறுகிறான்.

"கண்டேன்... கற்பினிற் கணிகையை... கண்ணினால்க் கண்டனன்" இப்பதில் முழுமையாகவே உளவியல் நிறைந்ததொரு பதிலாகும். கம்பனின் கவித்திறனே 'கம்ப இராமாயணத்தை' இன்றும் பேச வைத்திருக்கின்றது. மனைவியான சீதையை இழந்து இராமன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கிறான். சீதையைத் தேடிப்போன அனுமான் வருகின்றான். 'சீதையை அனுமான் கண்டிருப்பானா?' என்ற கேள்விதான் இராமனின் மனதில் முன்நிற்கும். அதைப் புரிந்துகொண்ட அனுமான் முதற்கூறும் பதில் 'கண்டேன்' என்கிறான்.

இரண்டாவதாக, இராமனின் மனதில் 'சீதை கற்போடு இருப்பாளா?' என்ற கேள்வியாகும். அதைப் புரிந்துகொண்ட அனுமான் 'கற்பினிற் கணிகையை' என்கிறான்.

மூன்றாவதாக, இராமனின் மனதில் அனுமான் 'கண்ணால் கண்டிருப்பானா?' என்ற கேள்வியாகும். அதைப் புரிந்துகொண்ட அனுமான் 'கண்ணினால்க் கண்டனன்' என்கிறான். "கண்டேன், கற்பினிற் கணிகையை, கண்ணினால்க் கண்டனன்" என்று அனுமா னைக் கூறவைத்த கம்பனின் சாயலை ஒத்த "புள்ளிகள் முக்கியம் அதனைவிடப் பிள்ளைகள் முக்கியம், பிள்ளைகள் முக்கியம் எம் போன்ற பிள்ளைகள் முக்கியம்" என்று பிள்ளைகளையே கூற வைத்திருக்கிறார் அருட்தந்தை அன்புராசா அவர்கள். கருத்து வெளிப்பாடும், மொழியாட்சியும் மெய்சிலிர்க்க வைக்கிறது.

இத்தொகுதியில் இரண்டாவதாக 'ஏனோ' என்ற தலைப்பில் ஒரு கவிதை இடம்பெற்றுள்ளது. இக்கவிதை இலங்கையில் பின்பற்றப் படுகின்ற நான்கு மதங்களையும் பற்றிப் பேசுவதாக அமைந்துள்ளது. சகல மதங்களுமே 'மனித வாழ்வியல் நெறிகளையே' போதிக்கின்றன. ஒவ்வொரு மனிதனுமே தனது மதத்தை முழுமனதோடு நம்புகின் றான். மத ஸ்தலங்களுக்குச் சென்று வழிபாடும் செய்கின்றான். அதே வேளை, சமூகச் சீரழிவு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றான். இதற் கான காரணங்கள் என்ன என்பதைத்தான் கவிஞர் அன்புராசா அவர்கள் கேட்கின்றார்.

கேட்கப்படவேண்டியதொரு கேள்வியைத்தான் கவிஞர் அன்புராசா அவர்கள் கேட்டிருகின்றார். இந்தக் கேள்விக்கான விடைக்குள்தான் இலங்கை மக்களின் 'சுபீட்சமான வாழ்வே' உள்ளடங்கியுள்ளது.

இத்தொகுதியில் நான்காவதாக 'முன்னுக்குப் பின் முரண் ஏன்?' என்றதொரு கவிதை இடம்பெற்றுள்ளது. "இலக்கியப் படைப்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன மக்களிடமிருந்து கற்றதைத் திரும்பவும் அதே மக்களுக்குக் கொடுக்கின்றதொரு செயலாகும்” என ஓர் எழுத்தாளன் கூறியுள்ளான். இன்று ஒவ்வொருவரிடமும் 'அலைபேசி' உண்டு, ஒவ்வொரு வீட்டிலும் 'தொலைக்காட்சி' உண்டு, இவைகளுக்கு மேலால் 'ஐபாட்டும்' உண்டு. பெற்றோர்களே இவைகளைப் பாவித்துக்கொண்டு அவர்களே தங்கள் பிள்ளைகளைக் குறை கூறுகின்றனர். இந்தச் செயலைத்தான் கவிஞர் சுட்டிக் காட்டுகின்றார்.

“தீயை வைத்துக் கொண்டு திருக்குறளும் படிக்கலாம், தீயைக் கொண்டு திருடரெல்லாம் வீட்டைக் கூட எரிக்கலாம்” இப்படியொரு முதுமொழியுண்டு. இன்று நம்மவர்கள் தீயைக் கொண்டு வீடுகளை மட்டுமல்ல, திருக்குறளையும் எரிக்கின்றனர்...!

இவைகளைக் கண்டு கவிஞர் அன்புராசா கொதிக்கின்றார். மனிதாபி மானம் உள்ள ஒருவன் கொதிக்கத்தான் செய்வான்.

இத்தொகுப்பிலுள்ள இருபத்தியிரண்டு கவிதைகளும் பொதுமக் களிடம் 'நீதிகேட்கும்' கவிதைகளாகவே அமைந்துள்ளன. இன்னும் பல நூல்களை அன்புராசா அவர்கள் வெளியீடு செய்யவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**கே. ஆர். டேவிட்**
(ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்)
'பூபாளம்',
பிடாரி கோவில் வீதி,
ஆனைக்கோட்டை.
29.11.2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்தோரின் உலகம் பற்றிய சிறுவர்களின் விமர்சனமான 'வாழத் துடிக்கும் வடலிகள்'

தமிழிலக்கிய மரபில் குழந்தைகள் இலக்கியத்துக்கென தனித்துவமான வரலாறு ஒன்று உள்ளது. அந்த வரலாற்றில் சிறப்பான ஆளுமைமிக்க படைப்பாளிகள் பலர் குழந்தைகள் மற்றும் சிறுவர்களுக்கான படைப்புக்களைத் தந்து நிலைத்த புகழ் பெற்றிருந்தனர். மழலைகள் இலக்கியம் கதைகளாகவும் பாடல்களாகவும் விரவிக்கிடக்கின்றன. எனினும் பாடல்கள் பெற்ற செல்வாக்கினைச் சிறுவர்களுக்கான கதைகள் பெற்றிருக்கவில்லை. பாப்பாப் பாட்டுக்களை அழ. வள்ளியப்பா, சோமசுந்தரப் புலவர், மஹாகவி பாரதியார் என்று அந்நாளிலிருந்து இந்நாள்வரை நீட்சிபெறும் பட்டியலில் வரும் புலவர்களும் கவிஞர்களும் பாடித் தமிழிலக்கியத்திற்குச் செழுமை சேர்த்துள்ளனர். இந்தச் செழுமை குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் குறித்த எங்கள் சமூகத்தின் அக்கறையினை வெளிப்படுத்தி நிற்கின்றது. பிற்காலத்தில் கவிஞர்களாக இனங்காணப்பட்ட பலரும் உதிரிகளாகவேனும் குழந்தைப் பாடல்கள் - சிறுவர் பாடல்களைப் பாடியிருந்தனர். அவற்றில் சில நன்கு பிரபலமடைந்ததுடன் தனித்த முதன்மையினையும் பெற்றிருந்தன. அவை எங்கள் வாழ்வோடு பிரக்ஞையின்றியே பிணைந்துவிட்டன.

குழந்தைகள் மற்றும் சிறுவர்களுக்கான இலக்கியங்களை நயந்து இன்புற்றிருக்கும் எம்மிடத்தில் மழலை இலக்கியங்கள், குழந்தை இலக்கியங்கள், சிறுவர் இலக்கியங்கள் முதலிய சொற்பிரயோகங்களுக்கிடையிலான வேறுபட்ட பொருள்கொள்ளல் பற்றிய சிரத்தையும் குறைவாகவுள்ளது என்பதை படைப்பு அனுபவத்தாலும் நயத்தல் அனுபவத்தாலும் உணர்ந்து கொள்ளலாம். அண்மைக் காலத்தில் சிறுவர்களுக்கான படைப்பாக்கங்கள் நூல் வடிவத்திலும் ஒலி மற்றும் ஒளியிழை வடிவத்திலும் அதிகளவில் வெளிவந்தவண்ணமே உள்ளன. இவை யாவும் மேற்கண்ட சிரத்தையுடன் வெளிவருகின்றனவா என்பது குறித்து ஆராய்வது அவசியம். இவற்றில் சில சிறுவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக மற்றும் புறவுலகை சரிவரப் புரிந்துகொள்வதில்லை. சிறுவர்களுக்கான உலகத்தைப் பெரியவர்களின் - மூத்தவர்களின் உலகத்துப் பிரமாணங்களின்வழி புரிந்துகொள்ள முற்படுகின்றன. குழந்தைகளின் - சிறுவர்களின் உளவெளிப்பாடுகளை மூத்தவர்களின் வார்த்தைகளால் - மொழியால் பேசுகின்றன. இது குழந்தைகள் மற்றும் சிறுவர்களுக்கான உலகத்தினை தமது கண்ணோட்டத்தில் பெரியவர்கள் சித்திரிக்கும் ஆபத்தினை உண்டாக்கக் காரணமாகிவிடும்.

சிறுவர்களுக்கான இந்த நூலினைத் தரும் வணக்கத்துக்குரிய குருவானவர் செபமாலை அன்புராசா அவர்கள் பன்முக ஆளுமை கொண்ட படைப்பாளி. தனது மறை சார்ந்த பணிகளுக்கப்பால் சமூகப் பணிகளிலும் இலக்கியப் பணிகளிலும் மிகத் தீவிரமாக ஈடுபாடு காட்டிவருபவர். மரபுவழியான நாட்டுக்கூத்துக் கலை தொடர்பான விரிவான ஆய்வுகளைச் செய்துவருபவர். மாணவர்களையும் இளைஞர்களையும் வழிகாட்டும் வேலைப்பட்டறைகளை ஒழுங்கமைத்து நடத்திவருபவர். பல்வேறு இலக்கிய மாநாடுகள், ஆய்வரங்குகளில் பங்கேற்றுவருபவர். ஈழத்தில் வெளிவந்துகொண்டிருக்கும் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் தொடர்ச்சியாக எழுதிவருபவர். இவரது 'அதிர்வுகள்' (2014) எனும் நூல் தான் வாழும் சமூகம்பற்றிய இவரின் ஆழ்ந்த ஈடுபாட்டினைப் பிரதிபலிப்பது. மொத்தத்தில் செயலூக்கமிக்க ஆன்மீக, சமூக, கலை, இலக்கிய செயற்பாட்டாளர்.

2016ஆம் ஆண்டு 'சிறகடிக்கும் சிட்டுக்கள்' எனும் சிறுவர் பாடல் திரட்டொன்றினையும் அதற்கான இறுவட்டினையும் வெளியிட்டிருந்தார். அந்த வருடத்தில் வெளிவந்த சிறந்த சிறுவர் இலக்கிய நூலுக்கான வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சின் விருதினை அந்த நூல் பெற்றது. அதன் தொடர்ச்சியாக சிறுவர்களுக்கான நூலாக இது வெளிவருகின்றது. இந்த நூல்கள் மூலமாகச் சிறுவர் இலக்கியத்தோடு தன்னை அடையாளப்படுத்தும் அன்புராசா அடிகளார் இந்த நூலில் உள்ளடங்கும் படைப்புக்களில் தன்னைச் சிறுவர்களின் பிரதிநிதியாகப் பாவித்து சிறுவர்கள் மீதான அர்த்தமற்ற அழுத்தங்களை கேள்விக்குள்ளாக்குகின்றார். அவற்றில் பின்வரும் விடயங்கள் முதன்மையானவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சிறுவர்களுக்கு ஏற்றவகையில் நடந்துகொள்ளத் தவறிய அவர்களது பெற்றோரின் நடத்தைகளைச் சிறுவர்கள் வாயிலாக கேள்விக்குள்ளாக்குதல்

* சமூகத்து மனிதர்கள் அணிந்திருக்கும் போலி முகத்திரைகளை சிறுவர்கள் வாயிலாகக் கிழித்தெறியச் செய்தல்

* சிறுவர்களின் பிரச்சினைகளைச் சிறுவர்களே தம் வாயால் உரக்கப் பேசி வெளிப்படுத்தல்

சிறுவர்களுக்காக நிலவைப் பாடுதல், நட்சத்திரங்களின் அழகைப் பாடுதல், பறவைகள் விலங்குகளின் குணத்தைப் பாடுதல், நீதி நெறிகளைப் பாடுதல் என்று சிறுவர்களை மகிழ்வான உலகில் திளைக்கவைத்துக் களிப்பூட்டும் வகையில் பாடும் மரபிலிருந்து சற்றுவிலகி இந்தத் தொகுதியிலுள்ள பெரும்பாலான படைப்புக்களும் சிறுவர்களே சிறுவர்களின் பிரச்சினைகளைப் பேசுவதாக அமைந் துள்ளன. சிறுவர்கள் தம்மைச் சூழவுள்ளவர்களிடத்தில் எதிர்பார்த்து ஏங்கிநிற்கும் பல்வேறு விடயங்களைச் சிறுவர்களின் சாட்சியமாக இவர் வெளிப்படுத்துகின்றார்.

சிறுவர்களின் உலகம் வேற்றுமைகள், பிரிவினைகள், பகைமைகள் இல்லாதது. இவையனைத்தும் பெரியவர்களின் உலகில் நிறைந் துள்ளது. அந்த மனிதர்கள் உண்மையானவர்களல்ல. அவர்கள் சிறுவர்களைப் பரிவு பாசத்துடன் வாழ அனுமதிக்கவேண்டும் என்று சிறுவர்களே விண்ணப்பம் செய்வதாக 'உண்மை மனிதர் அன்றோ' என்ற தலைப்பிடப்பட்ட வரிகள் கூறுகின்றன. "ஒன்றுக்கும் உதவான்", "படிப்பு ஏறாது", "சரிப்பட்டு வரான்" முதலிய வார்த்தைகளால் சிறுவர் களை மலினமாக்கும் மூத்தவர்களின் கருத்துக்களை நிராகரிக்கும் சிறுவர்களின் எதிர்ப்பை 'ஒதுக்க வேண்டாம்' எனும் தலைப்பின்கீழ் காணலாம். வேற்றுமைகள்-ஒற்றுமைகள், பிணக்குகள்-இணக்கங்கள், பகைமைகள்-பகிர்தல்கள், பிரிவுகள்-பாலங்கள், பொய்மைகள்-பொதுமைகள் ஆகிய இரட்டை எதிர்நிலைகளில் நேர்முகமானவை யெல்லாம் சிறுவர்களுக்குரியவை, எதிர்முகமானவைகளே மூத்தவர்களிடத்தில் மிஞ்சியுள்ளன என்று பேசுகிறது 'எம் மனம் ஆற்றுவீர்' எனும் தலைப்பிடப்பட்ட வரிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் எவ்வாறு சிறுவர்களைப் பாதித்தது என்பதை 'வேண்டாம் மீண்டும் ஒருபரணி' என்ற தலைப்பிலமைந்த வரிகள் வெளிப்படுத்து கின்றன. சிறுபிள்ளைகளின் வாழ்வை புள்ளிகளுக்கான போட்டி, புலமைப்பரிசில் பரீட்சை, ரியூஷன் கலாசாரம், பாடசாலை மைய மான போட்டிகள் எவ்வாறு சீரழிக்கின்றன என்பதை சிறுவர்களின் முதுகின் பின்னே ஒழிந்து நின்று இந்த நூலாசிரியர் விமர்சனம் செய்வதை 'முக்கியம்', 'புதிய பாரதிகள்', 'சிந்திக்க மாட்டீரோ' ஆகிய தலைப்புகளின் கீழுள்ள வரிகள் புலப்படுத்துகின்றன.

இந்த நூலில் வந்துள்ள படைப்புக்களில் 'எமக்கு மட்டும் இப்படியேன்' மற்றும் 'ஒன்றுபட்டு உழைப்போமே' எனும் படைப்புக்கள் சிறுவர் பாடல்களுக்கான சந்தஇசைவு மிக்கவையாக அமைவதுடன் நல்ல சமூக நோக்கினை வெளிப்படுத்துவதாகவும் உள்ளன.

“தாத்தா பாட்டி சொன்னகதை
தந்த அறிவால் நீவிரெலாம்
தாத்தா பாட்டி இல்லாமல்
தனித்து வாழ விட்டதுமேன்?”

என்று வெளிப்படுத்தும் கருத்துக்கள் சிறுவர்களின் மனவெளிப் பாட்டினை சரிவர உணர்த்துபவை. சிறுவர்களிடத்தில் வளர்க்கப்பட வேண்டிய இயற்கையைப் பாதுகாத்தல் தொடர்பான உணர்வினை வெளிப்படுத்தும் “ஒன்றுபட்டு உழைப்போமே” எனும் தலைப்பின்கீழ்,

“குப்பைகளை வீசிடாமல்
குறித்த இடம் சேர்த்திடுவோம்
வெப்பத்தின் அலை குறைத்து
வீணழிவைத் தடுத்திடுவோம்”

என்று சிறுவர்களின் மனோபாவம் வெளிப்படும் வகையில் குறிப்பிடுகின்றார்.

சிறுவர்கள் மற்றும் குழந்தைகளுக்கான இலக்கியம் படைப்ப வர்கள் முன்னிலையிலிருக்கும் பெரியதொரு சவால் குழந்தைகள்-சிறுவர்களுக்கான மனோபாவத்தினைத் தம்மிடத்தில் உள்ள மைவாக்கி பின்னர் வெளிப்படுத்துதலே. இது மிகக் கடினமானது. இதனை வெற்றிகரமாகச் செய்வதற்கு சிறுவர்கள் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளின் அகவுலகம் பற்றித் தெளிவான புரிதல் அவசியம். அவர்கள் புறவுலகை தமக்கான பக்குவநிலையில் எப்படித் தரிசிக்கின்றனர் என்பதை உள்ளுணர்ந்து கொள்ளல்வேண்டும். அவற்றை அவர்களுக்கே உரிய மொழியில் வெளிப்படுத்த வேண்டும்.

இந்தக் கடினமான முயற்சியில் ஈடுபட்டுவரும் அடிகளார் செபமாலை அன்புராசா அவர்களின் முயற்சி வெற்றிபெறவேண்டும். "சிறகடிக்கும் சிட்டுக்கள்"(2016) என்ற தொகுப்பின் தொடர்ச்சியாக இப்போது "வாழத் துடிக்கும் வடலிகள்" வெளிவருகின்றது. இந்தத் துறையில் அவரது நல்ல படைப்பாக்கங்கள் இன்னும் வெளிவர வேண்டும். அவை அவரை ஒரு சிறுவர் இலக்கியப் படைப்பாளியாக எதிர்காலத்தில் அடையாளப்படுத்தி நிலைத்த புகழ் தரவேண்டும்.

**இராஜேஸ்வரன் இராஜேஸ்கண்ணன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
சமூகவியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துன்பியலினை அதிகம் பேசும் இத்தொகுப்பு பிறந்த மண்ணையும் வளப்படுத்துகிறது

உள்ளத்தின் உணர்வுகளின் வெளிப்பாடே கவிதைகளாகப் பரிணாமம் பெறுகின்றன. பிழைகண்டு பொங்குபவன் கவிஞன். பிறர் துன்பங் கண்டு வருந்துபவன் கவிஞன். தனது சூழலையும், பரந்த உலகத்தையும் நுட்பமான தனது அறிவுக்கண் கொண்டு நோக்கும் அவன் தனது உளத்தில் தோன்றும் உணர்வுகளைக் கவிதையாக்கி வாசகனுக்கு அளிக்கின்றான். அவரவர் அநுபவங்கள் அவரவர் கவிதைகளில் என்றவாறு.

அவ்வகையில் அருட்தந்தை அன்புராசா அவர்கள் சமகாலத்தில் நாட்டில் நடைபெறும் அவலங்களைக் கண்டு வருந்துகின்றார். அதன் வெளிப்பாடே இத்தொகுப்பிலுள்ள கவிதைகளாகும்.

பனுவலுக்கு முதன்மைபெறும் இறைதுதியோடு முதல் கவிதை தொடங்குகின்றது. தொடர்ந்து, தூய நான்கு மதங்கள் பின்பற்றப்படும் இலங்கை மண்ணில், அம் மதங்கள் செப்பும் உயரிய போதகங்களை மக்கள் புறந்தள்ளி, ஒருவருக்கொருவர் பகைகொண்டு அழிவின்பால் தம்மை ஆட்படுத்தித் துன்புற்றுச் சீரழிவது கண்டு குமுறுவதாக, 'ஏனோ' என்ற கவிதை படைக்கப் பெற்றுள்ளது.

வளர்ச்சியை நாடும் இளைய தலைமுறையினர் மூத்தோரிடம் செய்யும் விண்ணப்பம் 'கரந்தொடுப்பீர் பலம் கொடுப்பீர்' எனப் பதிவாகியுள்ளது. மற்றொரு கவிதை முரண்பாடு பற்றியது. ஊருக்கு உபதேசம் செய்யும் உலகம் தன்னளவில் தவறு செய்வது. உவமைக்கு ஓரடி பதமாய்:

"தொலைக்காட்சி கூடாதென்பீர் - தினந்தினம்
தொடர்களைத் தொடருகின்றீர்."

தற்போது உலகெங்கிலும் தோன்றியுள்ள பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலுள்ள நெருங்கமாட்டாத இடைவெளியை நாசுக்காகச் சுட்டும் ஒரு கவிதை. 'நேரமில்லை நேரமில்லை' என்பது. தாமும் தமது சொந்த விவகாரங்களும் என்று சதா திரியும் பெற்றோர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது மக்கட் செல்வங்களுடன் கூடிக்குலவ காலத்தில் சிறிதேனும் ஒதுக்கமாட்டாமல் அலைகின்ற வெறுமையைப் புகல்வது.

“நேரமில்லை நேரமில்லை
அப்பாவுக்கும் நேரமில்லை
அம்மாவுக்கும் நேரமில்லை”

சிரித்துக் கதைத்து மகிழ, கொஞ்சிக்குலவ, தம்மைப் பார்க்க, கூடி இருந்து உண்ண, பெற்றோருக்கு நேரமில்லை என்பது.

'சிந்திக்க மாட்டீரோ' எனுங்கவிதை சிறார்களின் உள ஏக்கத்தின் பிரதிபலிப்பு. சிறுவனாகத் தன்னை உருவகப்படுத்தி, கல்வித் தேடலுக் காகத் தரப்படும் வன்முறைகளை விமர்சிப்பது. காலைதொட்டு மாலைவரை ஓய்வின்றி ஓடவைக்கும் பெற்றோருக்கான விண்ணப்பம்.

தமது இளமைக் காலத்தை இயல்பான வாழ்வியலில் இணைத் திருந்த பெற்றோர், இன்று தமது பிள்ளைகளை அதற்கு முற்றிலும் முரணான வாழ்வினுக்கு நிர்ப்பந்திப்பதும், அவர்களின் சுதந்திரத்தைப் பறிப்பதுமான ஏக்கத்தின் வெளிப்பாடு 'எமக்கு மட்டும் இப்படியேன்' என்னும் மனதைத் தொடும் கவிதை.

“ஓலைக் குடிலில் இருந்தாலும்
ஒன்றாய்க் குலவிய நீவீரெலாம்
மாடி வீட்டில் இருத்தியெமை
மகிழ்ச்சி குலைய வைப்பதேன்”

இன, மத, சாதி வெறிகொண்டு ஒருவருக்கொருவர் குரோதம் பாராட்டி, நாட்டில் ஒற்றுமைக்கும், சமாதானத்திற்கு ஊறு விளைவிக்கும் விஷமிகளுக்கு எதிராக விண்ணப்பிக்கும் அறைகூவல் 'எம் கனவுகளை அடையச் செய்வீர்' என்னும் கவிதை.

“ஒருதாய் மக்கள் என்பதனால் - நாமும்
ஒருகுலமாகி முன்செல்வோம்!
சாதி வெறியைத் தகர்ப்பதனால் - நாமும்
சோதரர் என்றே பேர்பெறுவோம்.”

வேற்றுமை நீங்கி ஒற்றுமை ஓங்க உறுத்தும் ஆதங்கத்தின் வெளிப்பாடானது. 'எம்மனம் ஆற்றுவீர்' என்பதும் ஒற்றுமை பற்றியதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பது வருட போரின் வடுக்களை மீட்டுருச் செய்யுங் கவிதை 'வேண்டாம் மீண்டும் ஒரு பரணி.' வன்மனமும், வைராக்கியமும், போரும் பூசலும், அகந்தையும், ஆணவமும் கொண்டதனால் உண்டான ஆயுதப் போரின் விளைவால், உடலிழந்து, உயிரிழந்து, வாழ்விழந்து அநாதைகளாக்கப்பட்ட வரலாற்றை விளம்பி, இழந்துபோன வளமான வாழ்வை எண்ணி ஏங்கும் ஏக்கத்தின் பட்டவர்த்தனம்.

துன்பியலினை அதிகம் பேசும் இத்தொகுப்பு, பிறந்த மண்ணை வளப்படுத்துவதிலும் அவாக் கொண்டு பேசுகின்றது. 'ஒன்றுபட்டு உழைப்போம்' என்பது கவிதையின் மகுடம்.

காடுகளை அழித்து இயற்கைக்கு ஊறு செய்யாமல், கண்ட இடத்தில் கழிவுகளை வீசாமல், நாட்டைப் பாதுகாப்போம் என்பது போன்ற உயரிய போதகங்களைக் கோத்தெடுத்து இந்நூல் ஆக்கப்பெற்றுள்ளது. இது போன்ற பல நூல்களை அருட்தந்தை கொணர வேண்டுமென அவரை நான் ஆசித்து வாழ்த்துகின்றேன்.

காப்பியக்கோ **ஜின்னாஹ் ஷரிபுத்தீன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து மொழி

அருளொழுகு நெஞ்சும் அகம்நெகிழ் சொல்லும்
மருவியநல் வாழ்வினின் மாண்பாம் - குருவாம்
செபமாலை அன்புராசா சேயோர்க்குச் செய்த
உபயமாம் இந்நூல் உவப்பு.

உவந்த கருவும் உளந்தோய்ந்த வாக்கும்
தவத்தோர் உருவின் செயலாம் - திருவாகும்
சொல்லெடுத்துத் தேர்ந்த பொருளமைத்துத் தன்னுணர்வால்
நல்விருந்தாய்த் தந்தீர் நயந்து.

மானிட நேயமும் மக்கள் நலவாழ்வும்
வானிடை ஓங்கவே வாழ்நாளில் - ஊனுடல்
உள்ளத்தால் ஒப்பவே ஓர்ந்துநிதம் சேவைசெயும்
கள்ளமிலாய் வாழ்க கனிந்து.

வாழ்க தமிழரினம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வாழியரோ வாழுலகில்
வல்லமையாய் வாழ வகுத்த நெறியெலாம்
சொல்வதே நாவின் சிறப்பு.

சித்தாந்தப் புலவர் பண்டிதர்
**ம.ந.கடம்பேசுவரன்**, M.A (தமிழ் சிறப்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுரை

## வடலிகள் வளர வழிவிடுவோம்!

சிறுவர் இலக்கியங்களைக் "கவனமாகப் படைக்க வேண்டும்!" என்று அறிஞர்கள் கூறுகின்றார்கள். அவ்வாறு சொல்வதற்குக் காரணம் அவர்கள் சிறுவர்கள், சிறுவர் இலக்கியங்களைப் படிக்கின்றபோது அவர்கள் படிப்பதில் தெளிவு இருக்கவேண்டும். அவற்றைச் சரியாக அச்சிறுவயதில் புரிந்துகொண்டு உயரிய மதிப்பீடுகளை, இலக்கு களை வளர்த்துக் கொள்ள அவர்களுக்கு அவை உதவி செய்ய வேண்டும்.

சிறுவர் இலக்கியத்தின் உள்ளடக்கம் பொதுவாக சிறுவர்கள் எவ்வாறு ஒழுகவேண்டும், என்னென்ன செய்ய வேண்டும், எப்படி நடக்க வேண்டும் என்பவற்றைப் பேசுவதாக அமைந்திருந்தது.

மேலும் சிறுவர்களை மகிழ்ச்சிப்படுத்துதல், அவர்களின் திறமை களை வளர்த்தல், அவர்களின் கற்பனையைத் தூண்டுதல் போன்ற அம்சங்களை உள்ளடக்கியதாக சிறுவர் இலக்கியங்கள் எழுதப் பட்டன. இதனால் மேற்சொன்ன கூறுகளை உள்ளடக்கியதாக சிறுவர்களுக்கான இலக்கியங்கள் அமைக்கப்படுகின்றபோது அவை சிறுவர்களுக்கான இலக்கியம் (literature for children) என்று கருதப்படுகின்றது.

ஆனால், இப்போது சிறுவர்பற்றிய இலக்கியம் (literature on children) என்ற கருத்தியல் இதுவரை பார்க்காத புதியதொரு பக்கத்தினைக் கோடிட்டுக் காட்டுவதாகத் தெரிகின்றது. கடந்தகாலத்தை விடவும் இக்காலத்திலும் இனிவரும் காலத்திலும் அதிக கவனத்தை ஈர்க்கும், ஈர்க்கப்போகும் ஒரு விடயமாக சிறுவர் பற்றிய இலக்கியம் திகழும் எனத் துணிந்து கூறலாம்போல் தோன்றுகின்றது.

'வாழத் துடிக்கும் வடலிகள்' என்ற இந்நூலின் பெயரே இந்நூலின் உள்ளடக்கத்தினை கட்டியம்கூறி நிற்கின்றது. இத்தொகுதியில் உள்ள இருபத்திரண்டு கவிதைகளும் பெற்றோர், ஆசிரியர், சமூகம் ஆகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றின்பால் சிறுவர்கள் கொண்டிருக்கும் எண்ணங்கள், சிந்தனைகள், உணர்வுகள், மன நெருடல்கள் போன்றவற்றை வெளிக்கொண்டு வருகின்ற ஒன்றாகத் துலங்குகின்றது.

பிள்ளைகளுக்குப் பெற்றோராக, சிறுவர்களுக்குப் பெரியவர்களாக, மாணவச் செல்வங்களுக்கு ஆசிரியர்களாக, சிறுவர்களின் பாதுகாவலர்களாக - வழிகாட்டிகளாக விளங்குகின்ற நாம் சிறுவர்கள் பக்கமாக இருந்து அவதானிக்கின்றபோது சிறுவர்களின் மட்டில் நாம் கரிசனை கொள்ளவேண்டிய பல்வேறுபட்ட விடயங்கள் தெரியவரும்.

இத்தகைய ஒரு பார்வையை எனக்குள் ஏற்படுத்தியது என்னவெனில் அவயவங்கள் இழந்த சகோதர சகோதரிகளோடு குறிப்பாக அவயவங்கள் இழந்த சிறுவர்களோடு கடந்த மூன்று ஆண்டுகளாகப் பணியாற்றக் கிடைத்த அநுபவமே!

மேலும், ஆடிப்பாடி மகிழ்ச்சியாகத் தங்களின் அறிவையும் ஆற்றல்களையும் வளர்த்துக்கொள்ள வேண்டிய சிறார்கள் 'புத்தகப் பொதிகளோடு' 'ரியூஷன்' என்ற பெயரில் வாடி வதங்குவதைப் பல நேரங்களில் கண்டு துன்புற்றேன்.

பலதரப்பட்ட குடும்பங்களைச் சந்திக்கின்றபோது சிறுவர்களின் இன்றைய வாழ்க்கைச் சூழலில் அவர்களுக்குள் இருக்கும் அல்லது அவர்கள் வெளிப்படுத்தும் பல்வேறுபட்ட உணர்வுகளை ஆழ்ந்த வாசிப்புக்கு உட்படுத்த எண்ணினேன். அச்சிறுவர்களின் உணர்வு களுக்கு வார்த்தை வடிவம் கொடுத்ததன் விளைவுதான் இப்படைப்பு!

என்னுடைய பல முன்னைய ஆக்கங்களைப்போல "இப்படித்தான் அமையவேண்டும்" என இப்படைப்பை நான் எண்ணியதில்லை. என்னுடைய ஏனைய பல படைப்புக்களும் ஆக்கங்களும் இப்படித் தான் இருக்கவேண்டும் என்பதைச் சூழ்நிலைகளே அநேகமாகத் தீர்மானித்திருக்கின்றன.

அவை போலவே "வாழத் துடிக்கும் வடலிகள்!" என்ற எனது இவ்வாக்கமும் மிளிர்கின்றது. இப்படியான ஆக்கங்கள் நாம் எண்ணிப் பார்ப்பதற்கு மேலாகவே சிறப்பாக அமைந்து விடுவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு. அப்படிப்பட்ட ஓர் ஆக்கமாகவே இப்படைப்புத் திகழுகின்றது.

பெற்றோர், பெரியோர் பற்றிய சிறுவர்களின் மனப்பதிவுகள், சமூகம் குறித்த சிறுவர்களின் ஆழ்மன எண்ணங்கள், ஏக்கங்கள், எதிர்பார்ப்புக்கள், தம்மைச் சுற்றி நடக்கும் உலக நடப்புக்கள் குறித்த அவர்களின் பார்வைகள் போன்றவற்றினை இப்படைப்புத் தெளிவாக முன்வைக்க முயல்கின்றது என்றே நம்புகிறேன்.

'வளர்ந்த' அல்லது 'வளர்ச்சி அடைந்துவிட்ட' இந்தச் சமூகத்திற்குச் சிறுவர் உலகம் அழுத்தம் திருத்தமாகச் சில செய்திகளைச் சொல்ல விளைவதாகவே எனக்குப்படுகின்றது.

அவ்வகையில் இப்படைப்பின் இலக்கு சிறுவர்களுக்கும் குழந்தைச் செல்வங்களைப் பெற்றெடுத்தவர்களுக்கும் மட்டுமல்ல, சிறுவர் களைப் பேணி வளர்ப்பவர்களுக்கும் பெரியவர்களுக்கும் உரியதே. குறிப்பாக பெற்றோர்கள், ஆசிரியர்கள், சிறுவர்களின் பாதுகாவலர் கள், வழிகாட்டிகள் என சிறுவர்களோடு தொடர்புடைய அனைவருக் கும் ஆனதே.

நாம் வாழும் சமூகம் மறுபடியும் சீரமைக்கப்படவேண்டிய ஓர் அவசரத் தேவை இருக்கிறது என்பதனை இன்று பலரும் ஏற்றுக் கொள்கின்றார்கள். எவ்வாறெனில் சிறுவர்களின் உலகத்தினுள் நுழைந்து பார்த்தால் அவ்வுலகம் உண்மையில் மிகமிக மேலான, உயர்வான, உன்னதமான, மகிழ்ச்சியான உலகமாக இருக்கும் என்பதை நாம் அறியலாம். அவ்வாறு சிறுவர்களின் உலகினுள் புகுந்ததன் ஓர் அநுபவமாகவே இம்முயற்சி விரிகின்றது.

சிறுவர்களின் உலகுக்கு வாருங்கள், அதனைக் கொஞ்சம் பாருங்கள், அவர்களின் உணர்வுகளைக் கேளுங்கள், அப்போது நாம் வாழும் உலகம் விரிவாகும், விசாலமாகும், புனிதமாகும்.

"வாழத் துடிக்கும் வடலிகள்" என்ற இந்நூலுக்கு ஆழமான அர்த் தமுள்ள உரைகளைத் தந்த ஓய்வுநிலை உதவிக் கல்விப்பணிப்பாளர் கே.ஆர்.டேவிட், விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன், காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன் ஆகியோருக்கு என் உளம் கனிந்த நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கபூர்வமான ஆலோசனைகளைத் தந்துதவிய கவிஞர் சோ.ப., பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன், கவிஞர் அ.அழகுராஜா, அட்டைப் படத்தை வரைந்துதவிய ஓவியர் செல்வி எஸ்.சர்மலா, கணணி வடிவமைப்பாளர் அ.யூட்சன் ஆகியோருக்கும் என் நன்றிகள். மேலும் இந்நூலை வெளியீடு செய்ய அனுசரணை வழங்கிய நானாட்டான் பிரதேச செயலர், கலாசார உத்தியோகஸ்தர் ஆகியோருக்கும் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நிறைவாக, வாழத் துடிக்கும் வடலிகள் வாழ, வளர, வானுயர வழிவிடுவோம், வழியமைப்போம், வழிசமைப்போம்.

**செ.அன்புராசா அடிகள்**
'அமதிக்கரங்கள்'
மாங்குளம்.
அலைபேசி: 0778 648 548
மின்னஞ்சல்: anpuomi1970@gmail .com
முகநூல்: செபமாலை அன்புராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01. இருமுது குரவர் (இறை)வணக்கம்

தவங்கள் பலசெய்து
 தரணியில் நாமுதிக்க
தவமாய் இருந்தனையே
 இணைகரம் கூப்பிநிற்போம்!

எல்லைகள் அமைக்காது
 எமையன்பு செய்துநிதம்
தொல்லையே அணுகாதெமை
 தூக்கியே அணைத்துநிற்பீர்!

கல்வியிலே கருத்தூன்றி
 காலமெலாம் வாழுதற்கு
கனிவுடனே வழியாவீர்
 கண்கண்ட தெய்வமானீர்!

பொறுப்புடன் நடந்துநிதம்
 பொருளுணர்ந்து வாழ்ந்திடவே
அருகிருந்து வழிசெய்வீர்
 ஆருயிர் ஆனவரே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. ஏனோ?



புத்தரின் போதனையால்
பொலிவுற வேண்டிய நாடு - அவர்
சித்தம் நாடாதே
யுத்தம்செய்வ தேனோ?

சிவனைக் கும்பிட்டு
சீர்பெற வேண்டிய நாடு - அந்த
சிவவழி பெறாதே
சீரழிவ தேனோ?

அல்லாவைத் தொழுதே
அகம்மகிழ வேண்டிய நாடு - அவர்
அடிகள் செல்லாது
அல்லலுறுவ தேனோ?

இயேசுவை நம்பி
இன்புற வேண்டிய நாடு - அவர்
அன்பை உணராதே
அவதியுறுவ தேனோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03. கரந்தொடுப்பீர் பலம் கொடுப்பீர்

கள்ளம் கபடமற்ற
கடவுளின் பிள்ளைகள் நாம் - உமது
கண்மணிபோல் வளர்ந்திடவே
கரந்தொடுப்பீர் பலம் கொடுப்பீர்.

கோதிலாத் தங்கமான
குத்து விளக்குகள் நாம் - நல்ல
குழந்தை உள்ளம் கொண்டிலங்க
கரந்தொடுப்பீர் பலம் கொடுப்பீர்.

குற்றங்கள் தெரிந்திராத
பிஞ்சுக் குழந்தைகள் - நற்
குணங்களில் சிறந்தோங்க
கரந்தொடுப்பீர் பலம் கொடுப்பீர்.

பட்டங்கள் பெற்றிராத
சிட்டுக்கள் நாம் - என்றும்
சிறகடித்துப் பறந்திடவே
கரந்தொடுப்பீர் பலம் கொடுப்பீர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04. முன்னுக்குப் பின் முரண் ஏன்?

"தொலைக்காட்சி கூடா" தென்பீர் - தினந்தினம்
தொடர்களைத் தொடர்கின்றீர்!

"ஐபாட் கூடா" தென்பீர் - தினந்தினம்
அதனையே காவுகின்றீர்!

"அலைபேசி கூடா" தென்பீர் - தினந்தினம்
அதனுடனே வாழுகின்றீர்!

"அயலவர் கூடா" தென்பீர் - தினந்தினம்
அவரையே துணைக் கழைப்பீர்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05. நேரமில்லை நேரமில்லை!



நேரமில்லை நேரமில்லை
சிரித்து மகிழ நேரமில்லை
அப்பாவுக்கும் நேரமில்லை
அம்மாவுக்கும் நேரமில்லை!

நேரமில்லை நேரமில்லை
கதைத்துப் பேச நேரமில்லை
அப்பாவுக்கும் நேரமில்லை
அம்மாவுக்கும் நேரமில்லை!

நேரமில்லை நேரமில்லை
கொஞ்சிக் குலவ நேரமில்லை
அப்பாவுக்கும் நேரமில்லை
அம்மாவுக்கும் நேரமில்லை!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரமில்லை நேரமில்லை
எம்மைப் பார்க்க நேரமில்லை
அப்பாவுக்கும் நேரமில்லை
அம்மாவுக்கும் நேரமில்லை!

நேரமில்லை நேரமில்லை
கூடியிருந் துண்ண நேரமில்லை
அப்பாவுக்கும் நேரமில்லை
அம்மாவுக்கும் நேரமில்லை!

நேரமில்லை நேரமில்லை
ஒருத்தருக்கும் நேரமில்லை
நேரமில்லை நேரமில்லை
ஒன்றுக்கும் நேரமில்லை!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 06. எமக்கு மட்டும் இப்படியேன்!

ஊரும் உறவும் வேண்டுமென்றே
உணர்ந்து வாழ்ந்த நீவிரெலாம்
ஏதும் அறியா எம்தலையில்
ஏனோ நூல்கள் ஏற்றுகிறீர்?

ஓலைக் குடிலில் இருந்தாலும்
ஒன்றாய்க் குலவிய நீவிரெலாம்
மாடி வீட்டில் இருத்தியெமை
மகிழ்ச்சி குலைய வைப்பதேன்?

குடிலின் முற்ற நிலவொளியில்
கூடிக் களித்த நீவிரெலாம்
மாடி வீட்டில் எமைப்பூட்டி
மகிழ்வைப் போக்கி விடுவதுமேன்?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாத்தா பாட்டி சொன்னகதை
  தந்த அறிவால் நீவிரெலாம்
தாத்தா பாட்டி இல்லாமல்
  தனித்து வாழ விட்டதேன்?

கூழோ கஞ்சி தானுமுண்டு
  குலவி மகிழ்ந்த நீவிரெலாம்
கூடிக் குலாவ விடாதெமையே
  கொட்டும் பணத்தா லேதுபயன்?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07. சிந்திக்க மாட்டீரோ!



அன்பு மிக்க பெற்றோரே
அருமை பேணி வளர்ப்போரே - எம்
உள்ளம் தன்னை அறிவீரோ
உணர்வைக் கொஞ்சம் புரிவீரோ!

"படிபடி" என்று தினம்
படுத்தும் பாடு கொஞ்சமல்ல - எம்
உளம் சிதைந்து போவதனை
உணரத் தானும் மாட்டீரோ!

ஓடிஓடி "ரியூஷன்" என்று
ஓய்வு உறக்கம் ஏதுமின்றி - எம்மவர்
புலமை காட்டும் போட்டியை
புரிந் துணர மாட்டீரோ!

ஓய்தல் இன்றி வாடுகின்றோம்
உணர்ந்து நீங்கள் கொள்ளாமல் - எம்
உணர்வில் வரும் ஏக்கமதை
எண்ணவும் ஏனோ மாட்டீரோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## 08. உள்ளம் இரங்காதா?

வன்முறைகளாலே வாடிப்போகின்றோம்
வாண்மைக் கேட்டால் வருந்துகின்றோம்
வாழ்வைத் தரவும் வருவீரோ!

வேலைப் பணிப்பால் வேதனைப்படுகின்றோம்
வேற்றிடப் பெயர்வால் வெம்புகின்றோம்
வாழ்வைத் தரவும் வருவீரோ!

கல்வி இழப்பால் கலங்கிப்போகின்றோம்
கலைகள் இழப்பால் கவலைப்படுகின்றோம்
கண்டுவக்கத் தானும் அருள்வீரோ!

அன்பை இழந்தே அவதிப்படுகின்றோம்
அவலத் தொடர்பால் அரண்டுபோகின்றோம்
ஆற்றும் வழியை அருள்வீரோ!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## 09. எம் கனவுகளை அடையச் செய்வீர்!

ஒருதாய் மக்கள் என்பதனால் - நாமும்
ஒருகுலமாகி முன்செல்வோம்!
சாதி வெறியைத் தகர்ப்பதனால் - நாமும்
சோதரர் என்றே பேர்பெறுவோம்.

இனத் துவேஷம் இருப்பதனால் - நாமும்
இலங்கையராய் வாழ முடியாதே!
மதவிரோதம் மாற்றிவிட்டால் - நாமும்
மனித நேயம் பெற்றிடலாம்.

கொலைகொள்ளை விட்டொழிப்பீர் - நாமும்
கொண்டகொள்கை அடையச் செய்வீர்!
போதைப்பொருள் அழித்தொழிப்பீர் - நாமும்
பொறுப் புணர வழிசமைப்பீர்!

வேற்றுமைகள் விட்டொழிப்பீர் - நாமும்
ஒற்றுமையில் ஓங்கச் செய்வீர்!
எம்மையும் நீவீர் மதித்திடுவீர் - எம்
கனவுகளை அடையச் செய்வீர்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. ஒதுக்க வேண்டாம்!

"ஒன்றுக்கும் உதவான்!" என்றே
ஒருத்தருக்கும் சொல்ல வேண்டாம்
என்றோ ஒருநாள் - நாமும்
இந்நாட்டின் மன்னராவோம்.

"படிப்பு ஏறா!" தென்றே
பரிகசித்துக் பேச வேண்டாம்
பட்டங்கள் பெற்றே - நாமும்
சட்டங்கள் செய்திடுவோம்.

"சரிப்பட்டு வரான்!" என்றே
சலிப்புடனே சொல்ல வேண்டாம்
சாதனைகள் செய்தே - நாமும்
சரித்திரம் படைத்திடுவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. உண்மை மனிதர் அன்றோ!

வேற்றுமைகள் பாராட்டும்
வேறுபட்ட மனிதரல்ல!
வீறுடை வாழ்வாக்கும் - நாமும்
விரும்பிடும் மனிதர் அன்றோ!

பிரிவினையை வருவிக்கும்
பிளவுபட்ட மனிதரல்ல!
ஒன்றிணைப்பை உருவாக்கும் - நாங்கள்
உயர்வான மனிதர் அன்றோ!

பகைமையை ஏற்படுத்தும்
பண்பற்ற மனிதரல்ல!
பரிவுள்ளம் கொண்டிலங்கும் - நாங்கள்
பாசத்தின் மைந்தர் அன்றோ!





செ.அனீபுராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. எம் மனம் ஆற்றுவீர்!

உங்களுக்குள் எத்தனை யெத்தனை வேற்றுமைகள்!
எங்களுக்குள் எத்தனை யெத்தனை ஒற்றுமைகள்!

உங்களுக்குள் எத்தனை யெத்தனை பிணக்குகள்!
எங்களுக்குள் எத்தனை யெத்தனை இணக்கங்கள்!

உங்களுக்குள் எத்தனை யெத்தனை பகைமைகள்!
எங்களுக்குள் எத்தனை யெத்தனை பகிர்தல்கள்!

உங்களுக்குள் எத்தனை யெத்தனை பிரிவுகள்!
எங்களுக்குள் எத்தனை யெத்தனை பாலங்கள்!

உங்களுக்குள் எத்தனை யெத்தனை பொய்மைகள்!
எங்களுக்குள் எத்தனை யெத்தனை பொதுமைகள்!

இந்நாட்டின் எதிர்கால முடிசூடா மன்னர்கள் நாம் - தாய்
தந்தையரே உற்றுணர்ந்து நல்லுணர்வை
நித்தமும் தருகுவீர்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. வேண்டாம் மீண்டும் ஒரு பரணி!

உங்கள்
வன்மமும் வைராக்கியமும் - எம்
வளமான வாழ்வை சிதைத்ததுவே!

உங்கள்
போரும் பூசல்களும் - இங்கு
போக்கிய உயிர்கள் பல்லாயிரமே!

உங்கள்
அகந்தையும் ஆணவமும் - எம்மை
பாதாளம் நோக்கித் தள்ளியதே!

உங்கள்
ஆயுதப் போரின் விளைவு - பல
அநாதை மடங்களின் தோற்றமே!

எங்கள்
பெற்றோரை உற்றாரை இழந்து - இன்று
சிறுவர் இல்லமே எம்வீடு!

எங்கள்
அங்கங்களை இழந்துநாளும் - நாம்
கண்டது முடிவிலாத் துன்பமே!

வேண்டாம்
வேண்டாம் மீண்டும் ஒரு பரணி - நீர்
புவியில் பாடிட வேண்டாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14. முக்கியம்!

படிப்பு முக்கியம் - என்பதைப்போல
பரீட்சை முக்கியம்!
பரீட்சை முக்கியம் - என்பதைப்போல
புள்ளிகள் முக்கியம்!

புள்ளிகள் முக்கியம் - அதனைவிடப்
பிள்ளைகள் முக்கியம்!
பிள்ளைகள் முக்கியம் - எம்போன்ற
பிள்ளைகள் முக்கியம்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15. புதிய பாரதிகள்!

"காலை எழுந்த உடன் படிப்பு - நல்ல
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு - இதை
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா"
என்றான் எங்கள் பாட்டன் பாரதி!

காலை எழுந்த உடன் "ரியூஷன்" - பின்பு
பள்ளி முடிந்த வுடன் "ரியூஷன்"
மாலை முழுவதுமே "ரியூஷன்" - இதை
மனதில் இருத்திக் கொள்ளு மகனே(ளே)
என்கிறார் எங்கள் தாய் தந்தையர்!






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 16. பிரிவு வேண்டாம்!

“தீயதைப் பார்க்காதே தீயதைக் கேட்காதே
தீயதைப் பேசாதே” என்றீர்கள் அப்போ!

'அயலாரைப் பார்க்காதே அவர்பேச்சுக் கேட்காதே
அவருடன் பேசாதே' என்கிறீர்கள் இப்போ!

சிறுவர்கள் நாமன்றோ சிதறிப் போகிறோம்!
பெரியவர் நீங்கள் பிரிந்து நிற்பதால்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## 17. வேண்டும்!

கலைகள் வளரக்
கலைஞர் வேண்டும் - நல்ல
கவிகள் பாட - உயர்
கவிஞரும் வேண்டும்.

ஓவியம் தீட்ட
ஓவியர் வேண்டும் - நல்ல
நாடகம் ஆட - உயர்
நடிகரும் வேண்டும்.

மருத்துவம் பார்க்க
மருத்துவர் வேண்டும் - நல்ல
சிலையினை அமைக்க - உயர்
சிற்பியும் வேண்டும்.

விஞ்ஞானம் வளர
விஞ்ஞானி வேண்டும் - என்றும்
அஞ்ஞானம் மறைய - உயர்
மெய்ஞ்ஞானி வேண்டும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசையினை உணர்ந்திட
இரசிகனும் வேண்டும் - நல்ல
பாட்டினைப் பாடிட - உயர்
பாணரும் வேண்டும்.

எழுத்தது சிறக்க
எழுத்தாளர் வேண்டும் - நல்ல
இதயம் சிறக்க - உயர்
எண்ணமும் வேண்டும்.

சமூகம் சிறக்க
சகலரும் வேண்டும் - நல்ல
சோதரர் ஆகிட - உயர்
சமத்துவம் வேண்டும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18. போட்டிகள்

பேச்சுப் போட்டி
எழுத்துப் போட்டி
சித்திரப் போட்டி
சிறுகதைப் போட்டி!

கதைப் போட்டி
கவிதைப் போட்டி
விளையாட்டுப் போட்டி
விநோத உடைப் போட்டி!

படிப்பிலே போட்டி
பரீட்சையில் போட்டி
பள்ளிகளுக்குள்ளே போட்டி - பெறும்
புள்ளிகளுக்குள்ளும் போட்டி!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிகளோடு
பொழுதுகள் கழிகின்றன!
போட்டிகளோடு
பொழுதுகள் மறைகின்றன!

போட்டி போடுவதில் - எம்
பொழுதுகள் போகின்றன - எம்
பொழுதுகள் போகின்றன - வீணே
பொழுதுக ளெல்லாமே போகின்றன!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19. ஒன்றுபட்டு உழைப்போமே!

இயற்கையைப் பாதுகாத்து
 இன்பமுடன் வாழ்ந்திடுவோம்
வீட்டுக்கொரு தோட்டத்தினை
 விருப்புடனே செய்திடுவோம்.

பொலித்தீன் பாவனையை
 பொறுப்புடன் விலக்கிடுவோம்
பசுமைப் புரட்சிதனை
 பாரினில் தொடங்கிடுவோம்.

காடுகளை அழித்துவரும்
 கேடுகளை வென்றிடுவோம்
தண்ணீரைச் சேமித்தே
 மண்ணிற்கு வளம்சேர்ப்போம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப்பைகளை வீசிடாமல்
குறித்த இடம் சேர்த்திடுவோம்
வெப்பத்தின் அலை குறைத்து
வீணழிவைத் தடுத்திடுவோம்.

ஒன்றுபட்டு நின்றிடுவோம்
ஓரணியாய் இணைந்திடுவோம்
ஒன்றுபட்டால் வாழ்வு உண்டு
என்பதனை உணர்ந்திடுவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20. ஆசைமேல் ஆசை!

அமைதியான உலகில் வாழவும்
அன்பினில் இணைந்து வளரவும்
ஆசைமேல் ஆசையாய் இருக்கின்றோம்!

அயலோடு பகிர்ந்து வாழவும்
ஆலோசனை பெற்று உயரவும்
ஆசைமேல் ஆசையாய் இருக்கின்றோம்!

பயங்கள் நீங்கி வாழவும்
பண்பாய் நாளும் நிலைக்கவும்
ஆசைமேல் ஆசையாய் இருக்கின்றோம்!







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டைகள் நீங்கி வாழவும்
சகவாழ்வில் நிலைத்து ஓங்கவும்
ஆசைமேல் ஆசையாய் இருக்கின்றோம்!

ஒன்று சேர்ந்து உலகினில்
ஒவ்வொருவரும் வாழவும்
ஆசைமேல் ஆசையாய் இருக்கின்றோம்!

சுதந்திரமாய் வாழவும்
சோதரராய் மகிழவும்
ஆசைமேல் ஆசையாய் இருக்கின்றோம்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21. புதிய நம்பிக்கை


ஊருடன் உறவை இழந்தபோதும்
உயிர்வாழ
உதிக்கிறது புதிய உத்வேகம்!

தாயுடன் தந்தை இழந்தபோதும்
தரணி வாழத்
தளிர்க்கிறது புதிய நம்பிக்கை!

பள்ளியுடன் படிப்புப் போனபோதும்
பாரில் வாழத்
துளிர்க்கிறது புதிய உணர்வு!

கையுடன் கால் இழந்தபோதும்
கனவை அடையத்
துடிக்கிறது எங்கள் உள்ளம்!







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22. பிடிச்சிருக்கு!

கொஞ்சி விளையாட நீங்கள்
கெஞ்சுவது பிடிச்சிருக்கு - கண்
துஞ்சிடாது காக்கும் உங்கள்
நெஞ்சமும் பிடிச்சிருக்கு!

முதலிடம் நாம்பெற நீங்கள்
முயல்வது பிடிச்சிருக்கு - அதை
அடையாத போது உங்கள்
பிடிவாதமும் பிடிச்சிருக்கு!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புள்ளிகள் பெறும்போது நீங்கள்
புகழ்வது பிடிச்சிருக்கு - அவை
குறையும் போது உங்கள்
கொக்கரிப்பும் பிடிச்சிருக்கு!

வெற்றிகள் காணும்போது உங்கள்
வீறாப்புப் பிடிச்சிருக்கு - தோல்விகள்
அடையும் போது உங்கள்
தொந்தரவும் பிடிச்சிருக்கு!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இத்தொகுப்பிலுள்ள இருபத்தியிரண்டு கவிதைகளும் பொதுமக்களிடம் 'நீதி கேட்கும்' கவிதைகளாகவே அமைந்துள்ளன."

கே.ஆர்.டேவிட்

"...சிறுவர்களை மகிழ்வான உலகில் திழைக்கவைத்துக் களிப்பூட்டும்வகையில் பாடும் மரபிலிருந்து சற்றுவிலகி இந்தத் தொகுதியிலுள்ள பெரும்பாலான படைப்புக்களும் சிறுவர்களே சிறுவர்களின் பிரச்சினைகளைப் பேசுவதாக அமைந்துள்ளன."

இ.இராஜேஸ்கண்ணன்

"அருட்தந்தை அன்புராசா அவர்கள் சமகாலத்தில் நாட்டில் நடைபெறும் அவலங்களைக் கண்டு வருந்துகின்றார். அதன் வெளிப்பாடே இத்தொகுப்பிலுள்ள கவிதைகளாகும்."

காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன்



9 789554 609020

JS Graphics 0777 44 69 73

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org